**Subscription.**
Inland: Rs. 50/- year
For Advertisement
Apply to:
The Manager,
'The Morning Star,'
182, First Cross Street
JAFFNA.

# THE MORNING STAR

Registered as a Newspaper at the General Post Office, Sri Lanka
under No. QD/J/104/News/89
Established: 1841: A Christian Weekly: Published Every Friday
Vol. 149 Jaffna, Friday, 18 AUGUST 1989 No. 33
RIGHTEOUSNESS EXALTETH A NATION BUT SIN IS A REPROACH TO ANY PEOPLE

News and Articles in Tamil and English. Please send them to
THE EDITOR,
'The Morning Star,'
182, First Cross Street,
JAFFNA.

RECEIVED
Library

*News:*

## Work in the Eastern Province.

The Rev. Earl P. Solomons the C. S. I. Minister sent to start work in the Eastern Province has made a good beginning by starting a Day Care Centre for children under 5 and a Girls' Home at the St. John's Church Centre started by the Diocese at Uranee, Batticaloa. While a formal opening of these projects is still awaited, the programme however has begun in the buildings that have been completed there. The Day Care Centre was started on the 10th of July '89 with prayer by the Rev. V. Vivekanandan, the Superintendent Minister of the Methodist Church in Batticaloa. There are now 50 children under five years of age being cared for at this centre. The Girls' Home was started on the 15th of July and Mrs. Chinniah the Retired Principal of Vincent Girls' College was the Chief Guest. The Rev E. P. Solomons offered prayer. There are 35 girls now at this home. It is hoped that this is but a small beginning for a wide scale out-reach programme that is to be undertaken in the Eastern Province.

## Opening of Church and Day Care Centre building at Uyilangkulam.

The Diocese started work at Uyilangkulam early in 1988 with the purchase of 3 acres of land near the Uyilangkulam junction. A temporary cadjan shed was constructed to start the Day Care Centre. It was however felt that a permanent building was necessary. A spacious and well equipped building has just been completed when the Bishop the Rt. Rev. D. J. Ambalavanar declared open and dedicated the centre on Tuesday the 8th of August at 10-00 a. m. There was a large crowd which was present at the function from among the local community. The Rev. P. R. Navendranugoolan, Minister in charge of work in the Vavuniya District was able to supervise and complete this work. The Revds. S. D. S. Thiagarajah and Earl Solomons were also present at the function. Mr. Antony Saverimuttu the worker in charge at Uyilangkulam proposed a vote of thanks at the end of the function. Mr. Antony will function as worker both for Uyilangkulam and Kannaaddi. Uyilangkulam is nine miles from Mannar and 39 miles from Vavuniya.



*The Vice-Chancellor of the Jaffna University Prof. A. Thurairajah lays a wreath at the tomb of the Rev. Dr. Daniel Poor on his 200th Birth Anniversary on 27-06-1989 at the Tellippalai Mission Graveyard. Dr. Poor was the pioneer in higher education in Jaffna and the first Principal of the Batticotta Seminary (1823).*

## Bishop Sundar Clerke Retires.

The Rt. Rev. Sundar Clarke, Bishop of the Madras Diocese of the C. S. I. has decided to retire from August this year. Though he has more than two years up to his age of retirement, he has decided to retire earlier. He plans to be in Australia and continue his ministry. The Synod of the C. S. I. in accepting his retirement has also decided to recognise him as a C. S. I. Bishop in Australia.

Bishop Sundar was consecrated as the Bishop of the Madras Diocese on the 20th of October 1974 succeeding Bishop Lesslie Newbigin who retired earlier that year. As Bishop of the Madras Diocese, Bishop Sundar played a leading role in the life and ministry of the C. S. I. He was very much on demand in countries abroad as a popular preacher and missioner. The Diocese itself during the 15 years of his episcopate has seen vast strides of development both in its spiritual life and in its mission and out-reach programmes.

## Christian Theological Seminary Chunakam.

The staff of the Seminary has been further strengthened by the appointment as from August this year of Mrs. Chandra Victor to the permanent staff. Mrs. Victor holds a B. D. from Serampore University as a student of the United Theological College, Bangalore and the M. Phil. from the University of Birmingham, U. K. specialising in Islamic Studies. She also holds an additional diploma from the same University in the same field of studies. She presently teaches New Testament in the Seminary. Mrs. Victor also is deeply interested in the role of women in Church and Society. The Seminary with 16 students now have three full time post-graduate teachers and a few more with such qualifications as visiting lecturers. Preparations are being made for "Block teaching" of special subjects with visiting staff from abroad.

The Institute for Lay People will be holding Seminars this year on Christian Counselling, Living Religions, Women in Church and Society and other such concerns.

(HARTLEY College - continued)

The Hartley College teacher to whom I owe most was Mr. W. A. Walton, popularly known as "Shakespeare Walton". A six-footer, with shoulders proportionately broad, he struck terror in us when he raised his voice. He was one of those teachers who taught the top forms and also the pupils of Standard Six. Suddenly, he would say: "The distance between Point Pedro and Jaffna is nearly 21 miles......The distance between Point Pedro and Jaffna is about 21 miles......What is the difference?". We, aged 11, struggled to express the difference. Such questions were frequently sprung on us, and they sharpened our minds.

We understood Shakespeare aright, because he acted the play as a one-man theatre; or, if the class had good readers or speakers, he would get us to read the parts. Often he would get the Upper School (Standard Six upwards) to assemble in the Hall during the last period, and read poems, stories and plays. Our love for literature began with those readings.

If any of the pupils used 'big words' in his Essay, Mr. Walton would say: "You remind me of Dr. Johnson". Instead of saying: 'Let me have a pinch of snuff", he said: "Let me dip the summits of my digits into your odoriferous concavity, and extract therefrom a few atoms of pulverised tobacco, which when applied to the nasal promontory, gives a tickling sensation". Those with finer sensibility were effectively cured. He also advised us to set ourselves holiday tasks in reading. He had set himself the first task of reading the volumes of "Gibbon's Decline and Fall of the Roman Empire" during a vacation, and he completed it. I remember following his example and reading through the complete works of Shakespeare during the vacation following the Cambridge Junior Examination. Other holiday tasks in reading followed.

Another teacher who influenced me was Mr. S. T. Jeevaratnam, who taught us Mathematics and Chemistry. He had passed the B. Sc. London when he came to Hartley. He always wore white pepperil drill suits, was always neat and tidy in dress, in writing, and in the arrangement of his room. From the time he entered the class room to the time he left, he kept us busy. He filled the unforgiving minute with sixty seconds worth of Mathematics or Chemistry. The days he did not teach us his subjects were the first day, and the last day of term, when he discussed general matters including how to spend holidays profitably. His methodical ways impressed us greatly, and when I became a teacher, I for one tried to model myself on him.

Mr. R. W. M. Walton was a Trained Teacher, who had won the Oratorical Prize at the Government Training College for Teachers. Though he did not teach me in Class, he was in charge of the Senior Literary Association. His enthusiasm was such that he got the Association Programme for the whole term printed in advance with the names of the speakers, pupils as well as guest speakers. He had specialized in English Constitutional History, and delighted us with stories of Parliamentary debates and of fights for political rights. He made pupils preside over meetings and introduced us to the niceties of procedure at meetings. I heard the name 'Erskine May' from him and he taught us the wisdom of constitutional agitation for reform.

by *K. Pooranampillai.*

# உதய தாரகை

UTHAYATHARAKAI

Estd. 1841.

கிறிஸ்தவ வார இதழ். வெள்ளிதோறும் வெளிவருவது

நீதி ஜனத்தை உயர்த்தும் : பாவம் எந்தக்குலத்துக்கும் இழிவாம்

மலர் 149 18 - 08 - 1989 [இதழ் 33

## சிந்தனை 26.

### பொறுப்புள்ள ஆட்சியாளன்.

யோனா 2. 10 — 3: 8

நினிவேயின் இராசாவுக்கு எட்டினபோது, அவன் சிங்காசனத்தைவிட்டு எழுந்து, தான் உடுத்திருந்த உடுப்பைக் கழற்றிப் போட்டு, இரட்டை உடுத்திச் சாம்பலிலே உட்கார்ந்தான்- யோனா 3: 6.

இறைவனுடைய திட்டத்தையும் திருநோக்கையும் எதிர்த்து நிற்க யாராலும் முடியாது. இவ்வுண்மைக்கு உயிரோட்டம் தருவதுதான் யோனா 2: 10ம் வசனம். எந்த இடத்தை வேண்டாத இடம் என்று வெறுத்துச் செய்தி சொல்ல மறுத்தானோ அந்த இடத்தின் மீட்புப் பணிக்குப் பொறுப்பாளி ஆக்கப்பட்டு விட்டான் யோனா.

நினிவே மக்களின் அழிவைக் குறித்துச் செய்தி சொன்னான் - செய்தியைச் செவிமடுத்த நினிவே மன்னன் வேதனைப்பட்டான். அழிவு அண்மித்துவிட்ட இறுதி நேரத்தில், மன்னன் இரட்டு உடுத்திச் சாம்பலில் இருந்து மக்களின் மீட்புக்காக இறைவேண்டுதலில் ஈடுபட்டான்.

இரட்டு என்பது சணலினாலான ஒரு உடை. இதை துக்கத்திற்கு அடையாளமாகவும் குற்ற உணர்வின் அடையாளமாகவும் எபிரேய மக்கள் அணிந்து கொள்வார்கள். துக்கத்தின் அடையாளமாக யாக்கோபு இரட்டு உடுத்திக் கொண்டான். ஆதி 34: 43.

குற்ற உணர்வுக்கு அடையாளமாக ஆகாப் மன்னன் இரட்டு உடுத்திக் கொண்டான் என்பதை 1 இரா 21ம் அதிகாரம் அறிமுகம் செய்து வைக்கின்றது.

நினிவே மன்னன் இரட்டு உடுத்திய நிகழ்வில் இருந்து அறியப்படுவது:- 1. மக்கள் அழியப் போகிறார்கள் என்ற துக்க உணர்வு. 2. மன்னனாக இருந்தும் மக்களை வழிப்படுத்தி நெறிப்படுத்தத் தவறிவிட்டேன் என்ற குற்ற உணர்வு இரண்டுக்கும் இடையே நின்று போராடிய நினிவே மன்னன், இரண்டு உணர்வுகளையும் உள்ளடக்கியவனாக இரட்டு உடுத்திக் கொண்டான் என்று கூறுவது கருத்துடையதாக அமையும்.

தன்நாட்டு மக்கள் அழிந்து பட்டுப்போன பின், தன்ஆட்சி இருந்தென்ன இல்லாது போயென்ன? மக்கள் இல்லாத மயமான பூமியில் ஆட்சியாளனுக்கு என்னவேலை? என்று உணர்ந்த மன்னன், தனது அதிகாரத்தை அடையாளப்படுத்தும் அரியணையிலிருந்து இறங்கினான் - மன்னன் என்பதை அடையாளப்படுத்தும் அணிகலன்களையெல்லாம் களைந்து வைத்து விட்டான். இப்போ தன்னைச் சாதாரண மக்களில் ஒருவனாக ஆக்கிக் கொண்டு, மீட்படையும் வழியைச் செயற்படுத்த முயன்றான். இவைகளெல்லாம் தன் நாட்டு மக்களில், நினிவே மன்னன் வைத்திருந்த அன்பையும் கரிசனையையும் எடுத்துக்காட்டுவதாக அமைகின்றன. இது அன்றைய நிலை.

ஆனால் இன்று, மக்கள் எக்கேடு பட்டாலும் படட்டும். ஆட்சி வீழ்ச்சி அடையாமல் நிலைக்க வேண்டுமென்று விரும்பி, ஆட்சியை நிலைப்படுத்துவதில் மிக்க அக்கறையுடன் செயற்படும் ஆட்சியாளருக்கு நினிவே மன்னனின் மனப்பக்குவம் வரவில்லையே ஏன்? காரணம், இறைவனுக்குப் பயப்படும் பயம் இல்லாது போய் விட்டது என்றுதான் கூறவேண்டும். அதுதான் பொருத்தமும்.

தன் மக்கள் அழிந்து தேய்ந்து போனாலும் போகட்டும் அவர்களது பொருளாதாரம் கெட்டுப் போனாலும் போகட்டும் நாம் ஆட்சி செய்வோம் என்று இறுமாப்புடன் நிற்பது ஆட்சியாளனுக்குரிய பக்குவ நிலையல்ல. மக்களே ஆட்சியாளனின் மணிமகுடம். மக்களை அழிவில் இருந்து மீட்பதே மன்னவனின் பணி. இக் கருத்தோட்டத்தை வெளிப்படுத்துவதுதான் யோனா 3; 6 வசனம்.

கலிங்கத்துப் போரை முன்னெடுத்துச் சென்ற அசோகச் சக்கரவர்த்தி அழிவைக்கண்டான் - இரத்த வெள்ளத்தைக்கண்டான் -இல்லத் தலைவர்களைப் பிரிந்த விதவைகளைக் கண்டான் — ஆண்பிள்ளைகளைப் பிரிந்த தாய்மாரைக் கண்டான் – வேதனைப் பட்டுத் துறவி ஆனான் – புத்த தர்மத்தை ஏற்றுப் புனிதமான பணி தொடர்ந்தான். இது வரலாறு. இன்று, இவ்வரலாறுகள் எல்லாம் அர்த்தமற்ற வரலாறுகளாகி விட்டன. காரணம், கல்லான நெஞ்சம் படைத்தவர்கள் ஆட்சிப் பொறுப்பில் இருப்பதே! தமது ஆட்சியை வீழ்ச்சி அடையாது காக்க வேண்டும் என்பதில் இவர்களுக்கு இருக்கும் கரிசனை மக்களில் இல்லையே? எப்போது வரும்? இறைவனை முழுமையாக ஏற்றுக் கொள்ளும் போது வரும்

தனது செங்கோலின் வலிமையால், அழிவிலிருந்து மக்களை மீட்டெடுப்பது அரிதிலும் அரிது. இறைவனுடைய கிருபையினாலேயே இப்பெரும்பணி முடிவடையும் என்று உள்ளூர உணர்ந்த நினிவே மன்னன் மக்களைப் பார்த்துக் கூறியது:-

"நினிவேயிலெங்கும் மனுஷரும் மிருகங்களும் மாடுகளும் ஆடுகளும் ஒன்றும் ருசிபாராதிருக்கவும் மேயாமலும் தண்ணீர் குடியாமலும் இருக்கவும் வேண்டும் என்றான் யோனா 3: 7.

அடுத்து அவன் கூறியது.

"தம் தம் பொல்லாத வழிகளையும் தம் தம் கைகளிலுள்ள. பொல்லாத கொடுமையையும் விட்டுத் திரும்பக் கடவார்கள்" என்பதே.

பொல்லாத வழிகளையும் கொடுமைகளையும் விட்டு மக்கள் விலகவில்லை என்றால் அழிவு மலிவாகிவிடும். அழிவு, மலிவுப் பொருளாகாமல் இருக்க மக்களுக்கு அழைப்பு விடுக்கும் மன்னனின் அறிவு இறை அறிவுக்கு நேராக நிற்பதையே காட்டுகின்றது.

இன்று, இவ்வேத பாகத்தைப் படிக்கும் போது உணரப்படுவது அழிவிலிருந்து மக்களை மீட்டெடுக்க வேண்டும் என்ற நினிவே மன்னனின் கரிசனையும் அன்பும், ஆட்சிப் பொறுப்பிலிருக்கும் அனைவருக்கும் இருக்க வேண்டிய நல்ல இயல்பூக்கமாகும். இயல்பூக்கம் இல்லை என்றால் மீட்பு என்ற சொல்லும் தூரமான இடத்திற்குச் சென்று ஓடி மறைந்துவிடும்.

ஆட்சிப் பொறுப்பில் இருப்பவர்கள், அரியணையிலிருந்து இறங்காத வரை- தம்மை அடையாளப்படுத்தும் அணிகலன்களை அகற்றாதவரை அழிவு என்ற சொல் உயிர்பெற்று விடும்.

அகில உலக மீட்பராக வந்த நமது மேய்ப்பரும் மீட்பருமாகிய கிறிஸ்து, எல்லா வகையிலும் நம்மைப்போல் சோதிக்கப்பட்டு பாடுற்றார். (எபிரே 2:18) இவருடைய முழுமையான திருநோக்கு, மக்களை அழிவிலிருந்து பாதுகாப்பதே அன்றி வேறு ஒன்றுமில்லை. இவ்வுண்மையைப் பிரதிபலித்து நிற்பதே யோனா 3ம் அதிகாரம்.

மக்களுக்காக வேதனைப்படாத மன்னன், மன்னனாக இருப்பது தவறு. மக்கள் அழிந்து பட்டுப் போனபின் மன்னன் மயான பூமியையா ஆட்சி செய்வது? சுதந்திரமான தனிநாடு மயான பூமியாகவும் சாம்பல் மேடாகவும் ஆவதற்கு முன், மன்னன் மனம் திரும்பி இறைவழிப் பாதைக்கு வர வேண்டியது அவசியமான ஒன்று. நினிவே மக்களின் மீட்பில் யோனாவைப் பயன்படுத்தினார் இறைவன். யோனாவின் செய்தி கேட்ட நினிவே மன்னன். அழிவிலிருந்து மக்களை மீட்கும் கருவி ஆக்கப்பட்டான்.

இன்று, அழிவிலிருந்து மக்களை மீட்டு எடுக்க, யோனாவைப் போன்ற அருட் தொண்டர்களைப் பயன்படுத்துகின்றார் இறைவன். அருட்தொண்டர்கள் மூலம் ஆட்சிப் பொறுப்பில் உள்ளவர்களையும் மீட்புப் பணியில் ஈடுபடவைக்கின்றார். அருட்தொண்டர்களும் ஆட்சியாளர்களும் இணைந்து செயற்படாதவரை, அழிவிலிருந்து மக்களை மீட்டு எடுப்பது அரிதிலும் அரிது.

துறையூரான்.
வண. ஆ. வே. யேசுதாசன்

# செய்திகள்.

### இலவச விவசாய நூல்.

யாழ்ப்பாணக் கல்லூரியின் மருதனமடத்திலுள்ள விவசாயப் போதனா நிறுவனம், விவசாய நோக்கு... எனும் இலவச விவசாயச் செயற்பாட்டுக் கைநூல் ஒன்றை வெளியிட்டுள்ளது.

இந் நூல் கிளிநொச்சி, யாழ்ப்பாணம், மன்னார், வவுனியா மாவட்டத்தில் விவசாயச் செயற்பாடுகள் பற்றியும், இலங்கைக் காலநிலை வலயங்கள், ரசாயன வகைகள், உயிர் வாயு, ஒன்றிணைந்த வேளாண்மைத் திட்டம், மீன் வளர்ப்பு, தேனீ வளர்ப்பு, காளான் வளர்ப்பு, ஆடு வளர்ப்பு, செயற்கை முறைச் சினைப் படுத்தல், கோமாரி தடுப்பு, முட்டைக்கோழி பாரமரிப்பு, தக்காளி ஒட்டுதல், கலப்புப் பயிர்ச்செய்கை, புகையிலைச் செடியில் இலைச்சுருள் போன்ற கட்டுரைகளுடன் வெளி வந்துள்ளது.

### நித்திரையிலும் படிக்கலாம்!

நாம் நித்திரையிலும் படிக்கலாம் எனச் சொன்னால் ஆச்சரியப் படுவீர்கள். ஆனால் சோவியத் நிபுணர் ஒருவர் நாம் பகலில் கற்பதிலும் பார்க்க, இரண்டு அல்லது மூன்று மடங்கு, நித்திரையில் கற்றுக்கொள்ள முடியுமெனக் கூறுகிறார்.

இதைப் பரீட்சிக்க, நீங்கள் செய்யவேண்டியது இவ்வளவு தான். நீங்கள் படுக்கப் போகும்பொழுது நீங்கள் கற்கவேண்டிய 30 அல்லது 35 சொற்களை ஒரு 'ரேப்றெக்கோடர்' இல் பதித்து அச்சொற்களைப் பலமுறை ஒலிக்க வையுங்கள். நீங்கள் படுக்கையை விட்டு எழும்பொழுது அச்சொற்களைப் பாடமாகச்சொல்லக் கூடியதாயிருக்கும்.

நித்திரைப்படிப்பு Sleep Study முறை ஒருமொழியைத் துரிதமாகக் கற்பதற்குப் பெரிதும் உதவுகிறது என இந்த, சோவியத் நிபுணர் கூறுகிறார்.

### பத்திரிகைத் தணிக்கை நீக்கம்.

உள்நாட்டு, வெளிநாட்டுச் செய்தித் தணிக்கையை அரசாங்கம் 24ம் திகதி திங்கட்கிழமை முதல் நீக்கம் செய்துள்ளது என்று வெளிநாட்டமைச்சரும் பாதுகாப்பு ராஜாங்க அமைச்சருமான திரு. றஞ்சன் விஜயரட்ண தெரிவித்துள்ளார். தீவிரவாதச் செயல்களையும் பிரிவினைவாதச் செயல்களையும் வெளியிடும்போது பத்திரிகையாளர் மிகப் பொறுப்புடன் நடந்து கொள்ள வேண்டும் என்பதைப் பத்திரிகையாளருக்கு மிகத் தெளிவாக வலியுறுத்தினர்.

### 71 எம்பிக்கள் ராஜினமா.

இந்திய லோக் சபையிலுள்ள பன்னிரண்டு எதிர்க்கட்சியின் 71 உறுப்பினர்கள் தமது ராஜினமாவை 24. 07. 1989 திங்கட்கிழமையன்று சபாநாயகர் திரு. பஸ்ராம் ஜாக்கரிடம் கையளித்துள்ளார்கள். சபாநாயகரும் அதை ஏற்றுக் கொண்டார்.

### செல்வாபுரம்.

அமரர், தந்தை எஸ். ஜே. வி. செல்வநாயகம் நினைவாக, கிராம சேவையாளர் பிரிவொன்று புதிதாக அமைக்கப்படவுள்ளது. தெல்லிப் பழை உதவி அரசாங்க அதிபர் பிரிவில், பட்டிக் கடவை கிராமத்தை உள்ளடக்கியதாக அமையும் கிராம சேவையாளர் பிரிவுக்கே, செல்வாபுரம் எனப் பெயர் சூட்டப்பட்டுள்ளது.

### விவசாயப் பாடசாலை.

வவுனியாவில் ஒரு கோடி ரூபா செலவில் விவசாயப் பாடசாலை ஒன்று அமைக்கப்படவுள்ளது. வடக்குக்கிழக்கு மாகாணத்தில் மேற்கொள்ளப்படும் விவசாய அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொள்ளும் வகையிற்தான் இது அமையும். இவ் விவசாயப் பாடசாலை அமைக்கும் நடவடிக்கைகள் வடக்குக் கிழக்கு மாகாண சபையினது துரித நடவடிக்கைகளின் ஒரு அங்கமாக அமையும் என்று, காணி–விவசாயப் புனர்வாழ்வு அமைச்சர் திரு. சி. எம். கணேசலிங்கம் தெரிவித்துள்ளார்.

### குணரட்ணம் மரணம்.

பிரபல தொழிலதிபர் திரு. கே. குணரட்ணம், புதன்கிழமை 9. 8. 1986 நண்பகல், கொழும்பிலுள்ள ஆமர் வீதி வழியே காரில் வந்து கொண்டிருந்தபோது, இனம் தெரியாத நபர்களினால் சுட்டுக் கொல்லப்பட்டார். சங்கராஜமாவத்தையிலுள்ள அவரது நிறுவனமான கே. ஜி. இன்டஸ்றீஸ் நிறுவனத்திலிருந்து மதிய உணவுக்காக வீடு திரும்பும் வேளையில், இச்சம்பவம் இடம் பெற்றது. பல தியேட்டர்களுக்கு அதிபரான திரு. கே. குணரட்ணம் சிறந்த சமூகசேவையாளராவார். இவரை, சினிமாஸ் குணரட்ணம் என்று, எல்லோரும் அழைப்பர்.

### 12,000 திருமணம்.

12000 ஏழைப் பெண்களுக்கு, அரச செலவில் திருமணம் செய்து வைக்க, தமிழ் நாடு திட்டமிட்டுள்ளது. இதற்கெனத் தமிழக அரசு ஒதுக்கியுள்ள தொகை 4 கோடி ரூபாவாகும்.

**தாரகை ஒளி:-**

பொய்நா வாலே தேடும் பொருளெலாம்;
காற்றுய்ப் பறக்கும் சாவையே நாடும்.

— நீதிமொழிகள். 21 : 06

# எங்கள் கருத்து

## கிறிஸ்த சேவ ஆச்சிரமம்: ஐம்பதாம் ஆண்டு நிறைவு விழா!

கிறிஸ்த சேவ ஆச்சிரமத்தின் 50 ஆம் ஆண்டு நிறைவு விழா இம் மாதம் 20 ஆம் 21 ஆம் நாட்களில், சுன்னுகத்தில் நடைபெறுமென அறிந்து பெருமகிழ்ச்சியடைகிறோம்.

வட-கிழக்கு மாகாணத்திலுள்ள கிறிஸ்தவ மக்கள், இந்த ஆச்சிரமத்தை மனப்பூர்வமாக நேசிக்கின்றனர்-தமது இதயங்களிலே அதற்கொரு சிறப்பிடமும் அளித்துள்ளனர். ஆகவே, இப் பொன் விழா, நம் மக்கள் மனத்தில் மகிழ்ச்சி பொங்கும் விழாவாக அமையும் என்பதில் ஐயமில்லை.

யாழ்ப்பாணத்திலே ஒரு ஆச்சிரமம் தொடங்கவேண்டுமென்ற எண்ணம், 1924 ஆம் ஆண்டில், பெரியண்ணன் கனம் செல்வரத்னம் அடிகளாரின் உள்ளத்தில் உதித்தது. இதற்கு உறுதுணையாயிருந்தவர், தென் இந்தியாவிலுள்ள திருப்பத்தூர் கிறிஸ்து குல ஆச்சிரமத்தை நிறுவியவரும், இந்தியாவில் கிறிஸ்தவ ஆச்சிரம இயக்கத்தின் தந்தையுமாகக் கருதப்படும் டாக்டர் சவரிராயன் யேசுதாசன் அவர்களே.

சேவக் செல்வரத்னம் அடிகளாரின் உள்ளத்தில் விதைக்கப்பட்ட ''ஆச்சிரமம்'' என்ற விதை படிப்படியாக வளர்ந்து, 1939 இல் மருதனமடத்தில் கிறிஸ்த சேவ ஆச்சிரமமாக மலர்ந்தது. மேல் நாட்டினர்க்குரிய கிறிஸ்தவ சமயம் மேல்நாட்டவர்களால் இந்த நாட்டிற்குக் கொண்டு வரப்பட்டு, இந்நாட்டில் நாட்டப்பட்டது என்று, இந்நாட்டு மக்கள் வெறுப்புணர்வுடன் நோக்குவதை உணர்ந்த பெரியண்ணன், கிறிஸ்தவ சமயத்தை சுதேசமயமாக்க வேண்டுமென்றும் ஆச்சிரமே அதற்கான வழி என்றும் உறுதியாக உணர்ந்தார்.

செல்வரத்னம் அடிகளாரின் ஆப்த நண்பரும் ஆலோசகருமாகிய வண. டாக்டர் டி. ரி. நயில்ஸ் இத்தகைய எண்ணத்திற்கு உறுதுணையாயிருந்து, செல்வரத்னம் அடிகளாரை ஊக்குவித்தார் - செல்வரத்ன அடிகளார் அன்று கண்ட கனவை நனவாக்க, தன் செல்வாக்கைப் பயன்படுத்தினர். பெரியண்ணனுடன் அடிக்கடி கூடி ஒன்றுகச் செபித்து வந்ததும் குறிப்பிடத்தக்கது. டாக்டர் நயில்ஸ் ஆச்சிரமத்தைப் பற்றிக் குறிப்பிடும்போது, ''ஆச்சிரமத் தொண்டர் குழாம் ஒரு குடும்பமாக நமது வாழ்விலும் கரிசனையிலும் எவ்வாறு ஒரு முக்கிய இடத்தைப் பெற்றுள்ளதோ, அது போல எனது ஊழியத்திலும் ஆச்சிரமம் மிகமிக முக்கியமான பாகமாயிருந்து வந்துள்ளது'' என்று கூறினர்.

யாழ். ஆச்சிரமம், திருச்சபை வாழ்க்கையுடன் நெருங்கிய தொடர்புடையதாயிருந்தபோதும், திருச்சபை அமைப்புக்குப் புறம்பாக விருந்து, பிரிந்து வாழும் சபையினரும் ஒன்று கூடி இறை வழிபாடு செய்யும் வாய்ப்பையும் அளித்துள்ளது. இதன் மூலம் சபைகளினது ஐக்கியத்தின் முன் சுவையை அளிக்கவும் அது தவறவில்லை. அனைத்துக் கிறிஸ்தவர்களும் ஒன்றாக இணைய வேண்டும் என்பதே கனம் செல்வரத்னம் அடிகளாரின் ஆர்வமும் செபமுமாகும்.

துன்ப துயரத்தினுல் பீடிக்கப்பட்டோருக்கும், தம் நாளாந்த வாழ்க்கையின் நெருக்கத்திலிருந்து அமைதியைப் பெற விரும்புவோருக்கும் ஆச்சிரமம் ஒரு ''பாலைவனச்சோலை'' யாக அமைந்து பெருந்தொண்டாற்றி வந்தது. தற்காலக்கலவரங்களினுலும், வாழ்க்கையின் வேகத்தினுலும் நெருக்கடிகளினுலும் இளைத்து நொந்திருப்போரெல்லாம் இங்கு வந்து சில நாட்கள் தங்கி, வேண்டிய மனவமைதி பெற்றுத் திரும்புவது வழக்கம்.

''ஆச்சிரமத் தொண்டர்கள், விசாலமான ஊழியத்தில் ஈடுபடும் போதகர் மாரல்ல. அப்படியானுல், ஆச்சிரமம் அவர்களுக்கொரு விடுதிச்சாலை போன்றதாகவே இருக்கும். ஆச்சிரம ஊழியத்தின் முக்கிய நோக்கம் இங்கு நடைபெறும் போதனை, வழிபாடு, ஆலோசனைப் பணி ஆகியவற்றின் பலனை மக்கள் பெறவேண்டும் என்பதும், அமைதியை நாடும் மக்களுக்கு இது ஒரு பேரின்ப வீடாக இருக்க வேண்டும் என்பதுமே. இவ்வகையான ஊழியத்தைச் செய்யும் ஆச்சிரமத் தொண்டர்களை அலைக்கழிக்காமல் அவர்களுக்கு வேண்டிய உதவிகளைச் செய்வதோடு அவர்களின் பணிக்காகச் செபிப்பதும் உதவிசெய்வதுமே சபையாரின் கடமையாக அமையவேண்டும்.

மக்கள் ஒன்று கூடி ஒரு குடும்பமாக வாழும் ஒரு வீடாக இந்த ஆச்சிரமம் இயங்க நாம் முயல வேண்டும். கடந்த 50 ஆண்டுகளாக ஆச்சிரமப்பணியை வளர்த்து வந்த இறைவன், இனி வரும் ஆண்டுகளிலும், இந்நிறுவனத்தை இப்போது தன்னந்தனிமையாக நடத்தும் சாம் அண்ணனுக்குத் துணை நின்று வழிநடத்த வேண்டுமென்பதே எமது வேண்டுகோளாகும். 1973 ஆம் ஆண்டில், கனம் செல்வரத்னம் அடிகளாரின் மரணத்தின் பின், சாம் அண்ணனைக் கொண்டு கடவுள் மகத்தான காரியங்களை ஆச்சிரமம் மூலம் நிறைவேற்றியுள்ளார். அதற்காகவும் கடவுளை மனதாரப் போற்றித் துதிப்போமாக.

## குடியைக் கெடுக்கும் குடி.

மதுவும் மங்கையும் போதை யூட்டுவன என்பார்கள். கள்ளை விட, கன்னியின் கடைக்கண் வீச்சில் போதை அதிகம் என்பார்கள் சிலர். ஆனுல் கள்ளுண்பது, எல்லாத் தவறுகளுக்கும் பாவங்களுக்கும் காரணமாய் அமைந்து விடக்கூடும். இதனை விளக்க ஒரு கதை கூறப்படுகிறது. ஒருவனின் முன் கள்ளு நிரம்பிய பாத்திரம் ஒன்று வைக்கப்படுகிறது, ஒரு குழந்தையும் ஒரு இளம் பெண்ணும் முன்னுல் நிறுத்தப்படுகிறுர்கள்.

கள்ளைக் குடிக்க வேண்டும் அல்லது குழந்தையைக் கொல்ல வேண்டும். அல்லது அப்பெண்ணைக் கெடுக்க வேண்டும் என அவனுக்கு நிபந்தனை விதிக்கப்படுகிறது. இம் மூன்று பாவங்களிலும் ஒன்றைச் செய்யுமாறு வற்புறுத்தப்படுகிறுன்.

குழந்தையைக் கொல்வது பெரிய பாவம். இது ஒரு உயிர்க்கொலை. பெண்ணைக் கெடுப்பதும் அதையொத்த ஒரு பாவமே, கள்ளைக் குடிப்பது பாவம் தான். ஆனுல், அது மற்றைய இரண்டையும் விட அவ்வளவு பரவாயில்லை என அவன் சிந்தித்து, கள்ளை அருந்தினுன். அந்தப் போதையில் அருகில் நின்ற பெண்ணைக் கெடுத்தான், அவனின் போதை தீரவில்லை. பின், அக் குழந்தையையும் கொன்றுன். ஒரு பாவத்தைச் செய்யத் தயங்கியவன் மூன்று பாவங்களையும் செய்தான். இக்கதையில் நடப்பதைப் போல், துன்பத்திலிருந்து மீளவும், உற்சாகம் பெறவும் சிலர் குடிக்கிறுர்கள். ஆனுல், இக் குடிப்பழக்கம் வேறு சில தவறுன நடவடிக்கைகளுக்கும் அடிகோலுகிறது.

சிலர், குடும்பங்களில் எழும் பிரச்சினைகளை மறப்பதற்காகக் குடிக்கப் பழகுகிறுர்கள். ஆனுல் அவர்களது குடிபோதையால் பிரச்சினைகள் விஸ்வரூபம் எடுக்கின்றன. போதையில் கோபம் அதிகரிக்கும். இதனுல சச்சரவுகள் தோன்றும் - பொருளாதாரப் பிரச்சினை தலைதூக்கும்- சமுகத்தில் மதிப்பை இழக்க நேரிடும், இத்தகைய பல பிரச்சினைகளுக்கும், சில குடும்பஸ்தர்கள் முகம் கொடுக்க வேண்டியுள்ளது.

பஞ்சமா பாதகங்களில் ஒன்றுக குடியை வைத்துள்ளனர். மதங்கள், குடிப்பழக்கத்தை ஆதரிக்கவில்லை. அதிலும், இந்துமதம் குடிப்பவர்களைச் சமுகத்திலிருந்து விலக்கியே வைத்துள்ளது. இக் குடிப்பழக்கத்துடன் கூடவே இன்று உலக மெல்லாம் போதை வஸ்துப் பாவனை, ஒரு பயங்கர நோயாக உருவெடுத்துள்ளது.

இப்பழக்கம் எதிர்காலச் சந்ததியை நோக்கி ஒரு கேள்விக் குறியாய் நிமிர்ந்து நிற்கிறது.

இதற்குத் தீர்வுகாண உலக நாடுகள் படாதபாடு படுகின்றன. கோடிக்கணக்கில் பணத்தைச் செலவிடுகின்றன. ஆயினும், போதை வஸ்துப் பாவனை அதிகரித்தே வருகின்றது. இதனை நிறுத்தாத பட்சத்தில் மிகவும் பாரதூரமான விளைவுகள் ஏற்பட இடமுண்டு என விஞ்ஞானிகளும் சமுகவியலாளர்களும் கருதுகின்றனர்.

தொடர்புச் சாதனங்களும் இவற்றைப்பற்றி அதிகளவு பிரசாரத்தை முடுக்கியுள்ளன. மக்களும், இவற்றின் தீமைகளை உணர்ந்து இவற்றிலிருந்து விலக வேண்டும்.

அறியாமையினுல், போதை வஸ்துப் பாவனைக்கு அடிமைப்பட்டிருக்கும் மக்களுக்கு புனர்வாழ்வமைக்கப் பொது ஸ்தாபனங்களும், ஏற்ற நடவடிக்கை எடுக்க முன் வர வேண்டும்.

அரசுகளும் இத்திட்டத்தினைச் செயற்படுத்தப் போதிய நடவடிக்கை எடுத்து, மதுவுக்கும் போதைவஸ்துப் பாவனைக்கும் அடிமையாகியுள்ள மக்களை மீள்விக்க ஆவன செய்யவேண்டும்.

## கிறிஸ்த — சேவ ஆச்சிரமத்தின் 50 ஆம் ஆண்டு நிறைவுவிழா — ''பொன்விழா''.

கிறிஸ்தவ சேவ ஆச்சிரமத்தின் 50 ஆம் ஆண்டு நிறைவு விழா இம்மாதம் (ஆகஸ்ட்) 20 ஆம் 21 ஆந் திகதிகளில் நடைபெறும். உங்கள் அனைவரையும் இவ்விழாவில் வந்து கலந்து எங்களுடன் சேர்ந்து எல்லாம்வல்ல இறைவனுக்கு நன்றி செலுத்திப் போகுமாறு அன்புடன் அழைக்கின்றேம்.

**நிகழ்ச்சி நிரல்:-**

**ஞாயிறு 20. 08. 1989.**

| | | |
|---|---|---|
| காலை | 7.00 – மணி. | பரி. நற்கருணை ஆராதனை |
| ,, | 10.00 – ,, | பக்திப்பாடல்கள் |
| மாலை | 3.30 – ,, | ''மனம் மாறிய மைந்தன்'' (நாட்டுக்கூத்து) |

**திங்கள் 21. 08. 1989.**

| | | |
|---|---|---|
| காலை | 7.00 – மணி. | பரி. நற்கருணை ஆராதனை |
| ,, | 8.39 – ,, | திருமுழுக்கு ஆராதனை |
| ,, | 9.00 – ,, | நன்றிசெலுத்தும் ஆராதனை |
| ,, | 11.00 – ,, | இசை நிகழ்ச்சி |
| மாலை | 3.00 – ,, | பொதுக் கூட்டம் |
| ,, | 5.00 – ,, | மகிழ்ச்சியின் இல்லத்திற்கு அத்திவாரக் கல்லு நாட்டுதல் (முதியோர்களுக்கு உரிய இல்லம்). |

சேவக் சாம் அல்பிரட்
(சாம் அண்ணன்).

## ''வடக்கின் போர்'' (BATTLE OF THE NORTH).

ஸ்தம்பித நிலை, மீண்டும் புத்துயிர் பெறுமா?

இடம்பெயர்ந்து வீசுங்காற்று - அல்லது பலமான நீரோட்டம் இவைதான் இவ்விரு கல்லூரிகளையும் ஸ்தம்பித நிலையில் இருந்து வெளிக்கொணர முடியும் என்று தோன்றுகிறது.

கடந்த பல்லாண்டுளாக நடைபெற்று வந்த வடக்கின் ''பெரும் கிரிக்கெட் போட்டிகள்'' (BIG MATCHES) இரண்டும் காலப் போக்கில் சமூக வைபவங்களாகவே SOCIAL EVENTS) மாறி விட்டன. ஆயிரக்கணக்கானவர்கள் ஒன்று கூடி மகிழ்ச்சியிலும் களியாட்டத்திலும் திளைத்தனர். அப்பப்பா! தத்தமது கல்லூரிக் கொடிகளை ஆரவாரமாகப் பறக்கவிடுவதென்ன! கோஷங்களை முழங்குவதென்ன! மேளங்கள் கொட்டுவதென்ன! சொல்லவே மகிழ்ச்சி தரும் வேடிக்கைகளில் இளைஞர்கள் ஈடுபட்டனர். கண்ணைக் கவரும் கவர்ச்சியான உடைகளை அணிந்து கோலாகலமாகக் காணப்பட்டனர் இளைஞர்கள். மனத்தினைக் கொள்ளை கொள்ளும் களியாட்டச் சூழ்நிலையில் இளைஞர்கள் இவ்வாறு நடந்ததில் வியப்பெதுவுமில்லை.

சென் ஜோன்ஸ் கல்லூரிக்கும் யாழ். மத்திய கல்லூரிக்கும் இடையிலான ''வடக்கின் போர்'' (BATTLE OF THE NORTH) என்று அழைக்கப்பட்ட புகழ் வாய்ந்த போட்டியினையும், யாழ்ப்பாணக் கல்லூரிக்கும், சென்ற் பற்றிக்ஸ் கல்லூரிக்கும் இடையிலான ''பொன்களின் போர்'' (BATTLE

(வளரும்)

CARE OF THE SICK......
(Continued from the last issue)

Restoration of health is the restoration of complete harmony and the right relationship both with the environment as well as God and the doctor plays a major role in establishing and maintaining this relationship with God. What better way is there to demonstrate the everlasting love of God, than to identify yourself fully with the patient and partake in his worries and anxieties?. When Dr. Paul Brand performed his muscle transplant operation for the first time in Vellore the prtient said "Do what you want with my hands, they are of no use to me." But after the operation as the cast was removed and as he tentatively picked up an object from the ground, with tears streaming down his eyes he exclaimed "This new hand you give me is not mine. It belongs to God, who made possible this miracle through your concern and love towards me".

From Hippocrates until the present day it has repeatedly been declared that when medical care is what it should be, the link between doctor and patient is love and utmost sensitivity to the needs of the patient as a whole in society. "The deepest roots of medicine are in love", to quote the lapidary phrase of Paracelsus "If our love is great, great will be the fruit it will obtain from medicine. For it is love which causes us to learn the art, and no doctor can be created without it".

But sadly during the last few decades there has been a radical change in the age old docter patient relationship and many reasons can be attributed to this gradual decline.

Firstly technical development in diagnosis and treatment such as radiography and chemical analysis often prevent a sufficiently 'human' contact being established. It is more often the canonball secondaries or the free thyroxin level that is widely discussed on visits to the patient which leaves him in a state of bewilderment and loneliness.

Secondly the increasing socialisation of medical care and its mass production often depersonalise the relationship between doctor and patient. This also limits the time available for the doctor to devote to his patient to a disturbing and harmful extent. The doctor merely concentrates on the patients headache or abdominal pain and treats it symptomatically little realising the conflicts raging inside the patient who has come to pour it all out to the doctor.

Thirdly increasing stress on academic and research work for recognition of professional proficiency has resulted in the distortion of the goal of providing relief for the suffering patient. This has resulted in large number of doctors working ruthlessly to do scientific research often at the cost of spending valuable time with the patient.

The above reasons have unfortunately led to the patient being treated as an amalgamation of organs and systems of which one has to be correeted at that particular visit. The doctors strive day and night, visit the patient numerous times, check his pulse, blood pressure and send numerous investigations. But those few minutes which are necessary to inquire and explain the problems to the patient are always considered a waste of valuable time by modern day doctors. At the end of it all, inspite of his spmytoms being cured emotionally and psychologically he emerges as a battered man because of the insecurity and loneliness caused by not knowing what really is wrong with him.

It is in a background of such alarming proportions that competent dedicated doctors are needed most. A doctor who spends time and identifies himself with the patient has to be groomed up from his youth. He should learn to do the best for the patient under the circumstances prevailing, making the utmost use of available resources. He also should have knowledge, skill, patience, compassion concern and commitment to go the second mile to hlep and supervise the patient back to a state of complete health.

At this juncture my thoughts wander back to the beginning of that dedicated lady Dr. Ida Sophia Scudder's ministry. Soon after she came to India after graduating in medicine before she founded C. M. C, Vellore, she was called by a man to visit his house where his mother was sick. With trembling fingers, she checked the contents of her shiny new satchel and set out. Never had the two miles between her house and the centre of town seemed longer.

She finally reached his house and there hidden away in a dark corner was an old lady breathing hoarsely with an occasional moan. In the dimlight aunt Ida groped along hollow cheeks to bony forehead and found it cold and clammy. She moved swiftly down a withered arm to the wrist and all she felt was faint flutter-a moan escaped from her lips as she realised that the lady was dying.

Suddenly, fear gripped her. The man must have known that his mother was going to die and had called her to discredit her before she had a chance to prove herself. If the woman died, scarcely a person in Vellore would fail to know by evening that the American doctor had lost her first patient.

Her first instinct was to leave the house at once. She had reached the door when she came to her senses. "Run away", and leave an old woman to die all alone in the dark?" Gently she retraced her steps and told the man, his mother was dying and nothing could be done to save her, but she could make her last hours happier and more comfortable.She moved the old woman out into the light, bathed her wasted body with cold water using her own hankerchief and sat there holding her hand on the ground next to the patient.

After some time the old woman opened her eyes and the fright in them slowly changed to gratitude and acceptance. Hours passed and finally aunt Ida's limbs began to numb after crouching beside the mat doing what she could to ease the agonising struggle with death. As she stumbled to her feet she felt a tug on her skirt and looking down she saw the old woman struggling with a superhuman effort and even as she shouted "Ilai" the lady kissed her feet and fell back. The effort had been too great and the end came almost immediately. Even though aunt Ida had lost her first patient, the joy and contentment of having helped that old lady through her last moments of life, spurred her on to continue identifying herself with every single patient regardless of caste, religion or creed. Even in the twilight of her career she accompanied timid ones to the operating room and was at their bedside when the anaesthetic wore off. When they left the hospital she was always there to give them her farewell blessing. She was a towering example of what our saviour had preached so long ago "For whatsoever you will to be done unto you, do so unto others'. This was achieved only by identifying herself fully with every single patient.

In the world of today especially Asia our traditions emphasise personal relations, family responsibility and mutual support systems. We must ensure that our health professionals of today and tomorrow will provide that human touch and care which is the crowning glory of our profession. We all need to build into the inherent system by example and precept, a firm orientation of humaneness and social responsibility. We must ensure that those people who enter the hallowed halls of Ascelpius and Hermos have the right qualities of the heart as well as the mind.

**Dr. Priashanta Visvalingam,**
*Green Memorial Hospital, Manipay.*

# The Youth in the Church's Mission.

**Equipping the young people for participation in God's Mission.**

In the CSI circles now we are reflecting on the theme 'Vision for Equipping the Local congregation in Mission' and trying to find ways and means to put this vision into action. In this connection I would like to reflect on, how the young people can be equipped for a meaningful participation in God's mission along with other fellowships of the Church.

Before we do that we need to see some of the challenges which hinder the meaningful participation of youth fellowships in God's mission for the world to-day. I point out some of the challenges before us.

1. *Spiritual Indifference to the reality of the world today.*

In Madras we have quite a number of youth movements working among the young people. And there are many young people who have committed their lives to Jesus Christ. But the discouraging aspect with these groups is that they understand their commitment in terms of their personal salvation which has no relationship to the realities around them. They are just satisfied with what God has done for them. There is certain amount of individualism, and self-centeredness in this way of understanding their commitment to Christ. Their commitment to Christ does not enable them to move into the world to share the suffering of the world as Christ did as a youngman. They are not open to the realities of the world around them.

2. *Social activism without a Spiritual basis.*

There is another group of young people who are at the other extreme. They actively get involved in various social programmes. They are indeed committed to the cause of human development and growth. But their involment is not a spontaneous expression of their relationship with God. There is a kind of spiritual vacuum in their life. Their desire to serve mankind does not stem from their knowledge of Jesus Christ and His Saving Grace.

3. *Programme oriented-indoor Christian Youth Fellowships.*

Many youth groups today want to make the Church as a Centre where programmes should be arranged to entertain the congregration members. People just come to be entertained. All the programmes of the Church are geared to cater to the needs of their own congregation members. In many youth fellowships there is a time of sharing in which they often share what God has done for them and seldom think what God wants them to do for others outside the four walls of their Chur ch. (to be Continued)

Registered as a Newspaper at the G. P. O. Sri Lanka under No. Q/J/104/ News 89
Printed for the Jaffna Diocese of the Church of South India at American Ceylon Mission Press. 182, 1st, Cross Street Jaffna on Friday 11,AUGUST 1989. and published by The Rev. THEVANESAN, 182, First Cross Street, Jaffna.